**இ.வே.ஆரா.கு - மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம்**
ISO (9001:2015)சான்றிதழ் பெற்ற நிறுவனம்
**நாக்பூர்**

# பருத்தி விளைச்சலுக்கான இருபத்தைந்தாவது வாராந்திர ஆலோசனை

(17 நவம்பர் முதல் 23 நவம்பர் 2025 வரை)

| தமிழ்நாடு | | பெய்த மழையளவு (மி.மீ) | | | | | | கணிக்கப்பட்டுள்ள மழையளவு(மி.மீ) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அக்டோபர்/ நவம்பர் | | | | | | நவம்பர் | | | | |
| | | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
|  | பெரம்பலூர் | | | | | | | | | | | |
| | சேலம் | | | | | | | | | | | |
| | திருச்சி | | | | | | | | | | | |
| | விருதுநகர் | | | | | | | | | | | |
| மழையின் அளவு மற்றும் வண்ணக் குறியீடு | | 0.1 to 2.4 மி.மீ | | 2.5 to 15.5 மி.மீ | | 15.6 to 64.4 மி.மீ | | | 64.5 to 115.5 மி.மீ | | 115.6 to 204.4 மி.மீ | |
| மழைப்பொழிவு வகை | | மிக லேசான மழை | | லேசான மழை | | மிதமான மழை | | | பலத்த மழை | | மிக அதிக மழை | |

**பயிர்நிலை:**

கோயம்புத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் விதைக்கப்பட்ட பருத்தி பூக்கும் நிலை முதல் காய்க்கும் நிலை வரை உள்ளது. மேலும், பருத்தி சுமார் 57 முதல் 112 நாட்கள் வயதுடையவை. களைகள் பரவியுள்ளன. இடையில் செய்யப்படும் வேளாண்மை செயல்பாடுகள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. கையால் களையெடுப்பு செய்யப்பட்டது. உறிஞ்சும் பூச்சிகளின் மற்றும் தண்டு கூன்வண்டு தாக்கம் ETL (பொருளாதார தீங்கு விளைவிக்கும் அளவு) ஐ விட அதிகமாக பதிவாகியுள்ளது. இலை கருகல் நோய், இலைப் புள்ளி நோய், சாம்பல் (அ) தயிர்ப்புள்ளி நோய் மற்றும் புகையிலை கீற்று வைரஸ்(டி.எஸ்.வி) ஆகியவற்றின் தாக்கம் பதிவாகியுள்ளது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் வயல்களிலும் அதைச் சுற்றியுள்ள வயல்களிலும், சில பகுதிகளில், பருத்தி பூக்கும் நிலையில் உள்ளது. மேலும், பருத்தி சுமார் 46 முதல் 66 நாட்கள் வயதுடையவை. இந்த குறிப்பிட்ட காலத்தில், மண்ணைத்தல், வேர்களின் அடிப்பகுதியில் நனைத்தல் மூலம் தண்டு கூன்வண்டு கட்டுப்படுத்தல் மற்றும் களையெடுத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டன. வயல்களில் களைகள் பரவியுள்ளன. தத்துப்பூச்சி மற்றும் காய் புழுக்கள் தவிர வேறு பூச்சிகளின் தாக்குதல் இல்லை. பருத்தி வயல்களில் தண்டு கூன்வண்டு மற்றும் வேர் அழுகல் நோய்பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆலோசனைகள்:**

கோயம்புத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், கனமழை காரணமாக தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்க, வயல் வரப்புகள், நீர்ப்பாசனம் மற்றும் வடிகால் வாய்க்கால்களை சுத்தமாக வைத்திருக்க விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள். கனமழையால் ஏற்பட்ட கரைசல் இழப்புகளை ஈடுகட்ட, 1% டிஏபி அல்லது 0.5% யூரியா இலைத் தெளிப்பு மேற்கொள்ளவும். புல் வகை களைகள் இருந்தால், குயிசாலோ·ஃபோப் எத்தில் 5% ஈசி @2மிலி/லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். பரந்த இலை களைகள் இருந்தால், பைரிதியோபாக் சோடியம் 10% ஈசி @1.25மிலி/லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். அல்லது புல் மற்றும் பரந்த இலை களைகள் இரண்டையும் கட்டுப்படுத்த, பைரிதியோபாக் சோடியம் 6% ஈசி + குயிசாலோ·ஃபோப் எத்தில் 4% ஈசி @2-2.5மிலி/லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும். உறிஞ்சும் பூச்சிகளின் எண்ணிக்கை பொருளாதார தீங்கு விளைவிக்கும் அளவு (ETL) விட அதிகமாக இருந்தால், தையாமெதோக்சாம் 25 டபிள்யூஜி @40கிராம் அல்லது ·ஃப்ளோனிகாமிட் 50டபிள்யூஜி @80கிராம் அல்லது டைனோடீ·ஃப்யூரான் 20எஸ்ஜி @60கிராம் அல்லது டோல்·ஃபென்பைராட் 15 ஈசி @300மிலி/ஏக்கர் விகிதத்தில் தெளிக்கவும். இளஞ்சிவப்பு காய்ப்புழு அந்துப்பூச்சியின் செயல்பாட்டைக் கண்காணிக்க ஏக்கருக்கு 2 இனக்கவர்ச்சிப் பொறிகளை நிறுவவும். ஆல்டர்னேரியா இலை கருகல் நோய், இலைப்புள்ளி நோய் மற்றும் பூஞ்சை காய் அழுகல் நோய் கட்டுப்படுத்த, (அசோக்ஸிஸ்ட்ரோபின் 18.2% + டை·ஃபெனோகோனசோல் 11.4% SC) (அல்லது) புரோபிகோனசோல் 25EC@1மிலி (அல்லது) தியோபனேட் மெத்தில் 70WP @ 2.5 கிராம் (அல்லது) கார்பென்டாசிம் 50 WP@ 0.4 கிராம் (அல்லது)(கார்பென்டாசிம் 12% + மேன்கோசெப் 63% WP) @2.5 கிராம்

(அல்லது) புரோபினெப் 70 WP @2.5 கிராம் (அல்லது) (மேத்திரம் 55% + பைராக்ளோஸ்ட்ரோபின் 5% WG) @2g (அல்லது) (ஃப்ளக்சாபைராக்ஸாட் 167 கிராம்/லிட்டர் + பைராக்ளோஸ்ட்ரோபின்333 கிராம்/லி SC) 10 லிட்டர் நீருடன் கலந்து தெளிக்கவும். வேர்களின் அடிப்பகுதியில் குளோரிபைரிபாஸ் 50 ஈசி@1200 மில்லி லிட்டர்/ ஹெக்டருக்கு மற்றும் கார்பன்டசிம் 50 டபிள்யுபி @1.0கிராம்/லிட்டர் நீரில் கலந்து தெளித்து மற்றும் மண்ணைத்து முறையே தண்டு கூன்வண்டு மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இலைப்பேன்கள் மூலம் பரவும் புகையிலை ஸ்ட்ரீக் வைரஸ் மேலாண்மைக்கு, வயல் சுகாதாரம், குறிப்பாக பருத்தி வயல்களிலும் அதைச் சுற்றியுள்ள பார்த்தீனியம் களைகளை அகற்றுதல் மற்றும் இலைப்பேன்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மேலாண்மை நடைமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளுக்கு: பருத்தி வகைகள், கலப்பினங்கள் மற்றும் மானாவாரி பயிர்களுக்கு முறையே 20, 40 மற்றும் 13 கிலோ/எக்டர் நைட்ரஜன் மற்றும் 20, 30 மற்றும் 10 கிலோ/எக்டர் பொட்டாசியம் என்ற அளவில் இரண்டாவது மேல் உரமிடுங்கள். ஆரம்ப கட்டத்திலேயே சாறு உறிஞ்சும் பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேம்பு சார்ந்த கலவைகளை (1500ppm) ஒரு லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் தெளிக்கவும். உறிஞ்சும் பூச்சிகளின் எண்ணிக்கை ETL-ஐ விட அதிகமாக இருந்தால், தையாமெதோக்சாம் 25 டபிள்யூஜி @40கிராம் அல்லது ஃப்ளோனிகாமிட் 50டபிள்யூஜி @80கிராம் அல்லது டைனோடீஃப்யூரான் 20எஸ்ஜி @60கிராம் அல்லது டோல்ஃபென்பைராட் 15 ஈசி @300மிலி/ஏக்கர் விகிதத்தில் தெளிக்கவும். ஈரமான மண் நிலையில் கைமுறையாக களையெடுப்பது சாத்தியமில்லாத நிலையில், புல் களைகளால் பாதிக்கப்பட்ட வயலில், ஒரு லிட்டர் தண்ணீருக்கு க்விசலோஃபாப் எத்தில் 5% ஈசி @ 2 மிலி மற்றும் அகன்ற இலைகளைக் கொண்ட களைகளுக்கு பைரிதியோபாக் சோடியம் 10% ஈசி @ 1.25 மிலி அல்லது புல் மற்றும் அகன்ற இலைகளைக் கொண்ட களைகளைக் கட்டுப்படுத்த பைரிதியோபாக் சோடியம் 6% ஈசி + குவிசலோஃபாப் எத்தில் 4% ஈசி @ 2-2.5 மிலி போன்ற களைக்கொல்லிகளைப் பயன்படுத்தலாம். இளஞ்சிவப்பு காய்ப்புழு அந்துப்பூச்சியின் செயல்பாட்டைக் கண்காணிக்க ஏக்கருக்கு 2 இனக்கவர்ச்சிப் பொறிகளை நிறுவவும். இளஞ்சிவப்பு காய்ப்புழு பொருளாதார தீங்கு விளைவிக்கும் அளவு (ETL) கடந்தால் (10% பச்சை காய்ப்புழு தாக்குதல் மற்றும் அல்லது ஒரு பொறியில் ஒரு இரவில் தொடர்ந்து 3 இரவுகளுக்கு 5-8 அந்துப்பூச்சிகள்), ப்ரொஃபெனோஃபோஸ் 50EC @ 600 மில்லி அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 SG @ 100 கிராம் அல்லது இண்டோக்ஸாகார்ப் 14.4SC @ 200 மில்லி / ஏக்கரில் தெளிக்கவும். வேர்களின் அடிப்பகுதியில் குளோரிபைரிபாஸ் 50 ஈசி@1200 மில்லி லிட்டர்/ ஹெக்டருக்கு மற்றும் கார்பன்டசிம் @ 1.0கிராம்/லிட்டர் நீரில் கலந்து தெளித்து மற்றும் மண்ணைத்து முறையே தண்டு கூன்வண்டு மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

பருத்தி உற்பத்தியில் விரிவான தொழில்நுட்பங்கள் குறிப்பாக மண் வகைகள்தேர்வு செய்தல், பருத்தி ரகங்கள், உர மேலாண்மை, விதைப்பு முறைகள், நீர் பாசன முறைகள், களை மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துதல் போன்ற தகவல்களைப் பெற ஆண்ட்ராய்டுஇயங்குதளத்திற்கானசெயலி**சிஜசிஆர் காட்டன் ஆப்ஸ் (CICR Cotton App)**மத்திய பருத்தி ஆராய்ச்சி மையம்வடிவமைத்துள்ளது. இந்த ஆப்ஸ் ஆனது கூகுள் பிளே ஸ்டோர்ல் (Google Play Store) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் விவசாயிகளின் நலன் கருதி பயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகள் மற்றும் வானிலை அடிப்படையிலான வாராந்திர ஆலோசனைகள் சிஜசிஆர் வலைதளத்தில்(https://cicr.org.in/resource-weekly-advisory) பெறலாம்.

**தமிழ் மொழிபெயர்ப்பு: முனைவர்கள். அ. மணிகண்டன்,& ம. சரவணன்**